செ. கு. எண்: 102 நாள் : 10.10.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 10.10.2015

சென்னை, சேப்பாக்கம், வெலிங்டன் ஆசிரியர் கல்லூரி அருகே காமராஜர் சாலையில் 8.10.2015 அன்று ஆட்டோவும், மாநகர அரசுப் பேருந்தும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் திரு. காமராஜ் சம்பவ இடத்திலேயும், ஆட்டோவில் பயணம் செய்த பட்டினபாக்கம் பகுதியைச் சேர்ந்த திருமதி லதா பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. காமராஜ் மற்றும் திருமதி லதா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த திரு. காமராஜ் மற்றும் திருமதி லதா ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**